செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 83 நாள் 15-2-2018

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் நாள் - வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் நாள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 23.02.2018 அன்று வெள்ளி கிழமை காலை 10.00 மணியளவில் வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற உள்ளது, என திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது,

வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு, மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் மற்றும் பிற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் பெறுவது சம்மந்தமாக விண்ணப்பங்கள் அளித்தல் மேலும் அவர்களின் தேவைகளை காலதாமதமின்றி எளிதில் பயன்பெறும் வகையில் அனைத்து துறைகளின் அலுவலர்களை ஒருங்கிணைத்து மாற்றுத்திறனாளிகளின் குறைகளை போக்கும் விதமாகவும், துறைகளின் திட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் பயன் பெறவும் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் நாள், 23.02.2018 அன்று வெள்ளி கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள “காயிதே மில்லத் அரங்கில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. எனவே, இச்சிறப்பு முகாமில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செ.ம.தொ.அ.
15/2/18
வேலூர்-1.